**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை**

**மயிலாடுதுறை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(11.04.2026 முதல் 15.04.2026)**

**அறிக்கை எண் 03/2026** **தேதி. 10.04.2026**

**மயிலாடுதுறை மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

மயிலாடுதுறை மாவட்டத்தின் 07.04.2026 முதல் 09.04.2026 வரையிலும் பகல் நேரவெப்பநிலை 32 - 35 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 25 - 28 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 86 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 86 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 0 - 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வட கிழக்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை மயிலாடுதுறை (11.04.2026 முதல் 15.04.2026)**

| கடந்த வார வானிலை 07.04.2026 முதல் 09.04.2026) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 15.04.2026 - 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 07/04 | நாள்-2 08/04 | நாள்-3 09/04 | தேதி | நாள்-1 11/04 | நாள்-2 12/04 | நாள்-3 13/04 | நாள்-4 14/04 | நாள்-5 15/04 |
| 2.3 | 0.0 | 2.1 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 2 | 3 |
| 32 | 35 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 36 | 36 | 36 |
| 25 | 27 | 28 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 28 | 28 | 28 |
| 5 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| 85 | 86 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 75 | 75 | 75 |
| 74 | 86 | 82 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 80 | 80 | 70 | 70 | 70 |
| 0 | 10 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 2 | 4 | 4 | 4 | 4 |
| வடக்கு | வட கிழக்கு | தென் தென் கிழக்கு | காற்றுவீசும் திசை | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தெற்கு | தெற்கு |

**மயிலாடுதுறை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 14.04.2026 மற்றும் 15.04.2026 ஆகிய தினங்களுக்கு லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 - 36 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 2 - 4 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது** | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| **பயறுவகை பயிர்கள்** | **உளுந்து** | உளுந்து மற்றும் பாசிபயறு செடிகளை அறுவடை செய்யவும் |
| | | வரும் தினங்களில் வறண்ட வானிலையை ஒட்டி ஒரிரு நாட்கள் செடிகளை நன்கு வெயிலில் காயவைத்து பின்பு பயறைப் பிரித்தெடுத்து சுத்தம் செய்து ஈரப்பதம் 9 சதவீதத்திற்க்கும் குறையும் வரை உலர்த்தி பின்பு சேமிக்கவும் |
| **தென்னை** | | *தென்னை மரத்தை சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைத்து கோடையில் மழை நீரை மண்ணில் சேமிக்கவும்.* |
| **கால்நடைகளுக்கு** | **மாடு** | வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் கால்நடைகளை காலை 6 மணி முதல் 10 மணிக்குள்ளும் மாலை 4 மணி முதல் 6 மணிக்குள்ளும் மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும் மேலும் கால்நடைகககுக்கு போதிய அளவு தண்ணீா் கொடுப்பதன் மூலம் நீா் பற்றாக்குறையினால் ஏற்ப்படும் நோய்களை தவிா்க்கலாம். |

**குறுஞ்செய்தி**

உளுந்து மற்றும் பாசிபயறு செடிகளை அறுவடை செய்யவும்

**இயக்குநர்**